செய்தி வெளியீடு எண். 157 நாள். 17.03.2017

**திருவள்ளூர் மாவட்டத்தில் சமூகநலம் மற்றும் சத்துணவுத்திட்டத்துறை, சமூக பாதுகாப்புத்துறையின் கீழியங்கும் நிறுவனத்தில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி.இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

~~~~~~

அரசாணை எண்.நிலை.57, சமூகநலம் மற்றும் சத்துணவுத்திட்டத்துறை, நாள்.20.07.2016-ன்ப தமிழ்நாடு அரசு, சமூக பாதுகாப்புத்துறையின் கீழியங்கும் நிறுவனத்தில் காலியாக உள்ள இணைப்பில் குறிப்பிடப்பட்ட காலிப்பணியிடங்களை முன்னாள் இராணுவத்தினர் மற்றும் பிறப்பட்ட முஸ்லீம் வகுப்பினைச் சார்ந்த முன்னுரிமை பெற்ற சமூக பாதுகாப்புத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் நிறுவனங்களில் கல்வி பயின்ற/பயின்று வரும் மாணவ/மாணவியரைக் கொண்டு நிரப்பப்பட உள்ளது. தகுதியானவர்கள் அதற்கான படிவத்தினை மாவட்ட இணையதள முகவரி அல்லது www.socialdefence.tn.gov.in இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து முழுமையாக பூர்த்தி செய்து கல்வி மற்றும் இதர சான்றின் ஒளிநகலுடன் 25.03.2017-க்குள் இயக்குநர் அலுவலகம், சமூக பாதுகாப்புத்துறை, எண்.300 புரசைவாக்கம் நெடுஞ்சாலை, கெல்லீஸ், அபிராமி தியேட்டர் அருகில், சென்னை-600 010. தொலைபேசி எண். 044-26426421 / 26427022 என்ற முகவரிக்கு வந்து சேரும்வண்ணம் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

காலிப்பணியிடம்: 1) பாதுகாவலர் - ஒன்று (ஆண் விண்ணப்பதாரர் மட்டும்) ஆதிதிராவிடர் 53 வயது வரை, பிற்பட்ட வகுப்பினர் 48 வயது வரை விண்ணப்பிக்கலாம் (+2க்கு இணையான கல்வி தகுதி இருப்பின் வயது வரம்பு கிடையாது) கல்வித்தகுதி 8-ம் வகுப்பு தேர்ச்சி, உயரம் 160 செ.மீ, மார்பளவு சாதாரண நிலை 79 செ.மீ இருக்க வேண்டும். இன சுழற்சி: முன்னால் இராணுவத்தினர் - வயது வரம்பு சலுகை நடைமுறையில் உள்ள விதிகளின்படி வழங்கப்படும். 2).சமையலர் ஒன்று (இரு பாலர்), 18 வயதுக்கு மேல் 32 வயதுக்குள் இருக்கவேண்டும். (+2 க்கு இணையான கல்வி தகுதி இருப்பின் வயது வரம்பு கிடையாது) கல்வித் தகுதி 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். ஊதிய நிரக்கு 4800-10000 + தர ஊதியம் ரூ.1400 + இதரப்படிகள்.

3).காவலர் - ஒன்று (ஆண் மட்டும்) 4).தோட்டப்பணியாளர் (ஒன்று) (இரு பாலர்) 5).காவலர் - சுத்திகரிப்பாளர் ஒன்று (ஆண் மட்டும்). 18 வயதுக்கு மேல் 32-க்குள் இருக்க வேண்டும் (+2க்கு இணையான கல்வி தகுதி இருப்பின் வயது வரம்பு கிடையாது) கல்வித் தகுதி: தமிழில் எழுதப்படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். பிற்பட்ட வகுப்பினர் - முஸ்லீம் இனத்தினர் மட்டும் முன்னுரிமையுடையவர். முன்னுரிமையுடையவர் கிடைக்கபெறாத நிலையில் முன்னுரிமையற்றவர் பிரிவிலிருந்து தேர்வு செய்யப்படுவார்கள். ஊதிய நிரக்கு 4800-10000 + தர ஊதியம் ரூ.1300 + இதரப்படிகள் இருக்கும் என்று மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவள்ளி அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~~